செ.வெ.எண்.296 நாள்.05.05.2018.

**திருநெல்வேலி பாளையங்கோட்டையில் கிராம சுயாட்சி இயக்கத்தில் இன்று வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ச்சிக்கான தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 143 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பணி நியமன உத்தரவினையும், 20 பயனாளிகள் மற்றும் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.84.5 இலட்சம் மதிப்பிலான வங்கி கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை அருண்ஸ் மஹாலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்–மகளிர் திட்டம் சார்பில் தனியார் வேலைவாய்ப்பு முகாம் இன்று (05.05.2018) நடைபெற்றது. இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று, 143 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பணி நியமன உத்தரவினையும், 16 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.77.78 இலட்சம் வங்கி கடனாகவும், 4 பயனாளிகளுக்கு தொழில் தொடங்குவதற்கு ரூ.6.74 இலட்சம் வங்கி கடனாகவும் ஆக மொத்தம் ரூ.84.5 இலட்சம் மதிப்பிலான வங்கி கடன் உதவிகளையும், தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற 34 நபர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். முகாமிற்கு இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை முன்னிலை வகித்தார்.

முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

கிராம ஊராட்சிகளில் மக்களின் வாழ்வாதாரம் உயர வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு, தமிழ்நாடு அரசு கிராம ஊராட்சிகளில் தனிகவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 239 ஊராட்சிகளில் கிராம ஒழிப்பு சங்கம் அமைக்கப்பட்டு ரூ.135.10 இலட்சம் சமுதாய நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 425 ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான உட்கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.425 இலட்சம் ஊக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மகளிர் முன்னேற்றம் காணவேண்டும் என்று மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடந்த 2 ஆண்டுகளில் ரூ.696.46 கோடி வங்கி கடன்கள் வழங்கப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, வேலை வாய்ப்பினை உருவாக்கிடும் வகையில் இதுபோன்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அரசு வேலைவாய்ப்புகள் குறைவாக இருப்பதாலும், தனியார் துறைகளில், அதிக வேலைவாய்ப்பினை தகுதியுள்ள இளைஞர்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கில் இதுபோன்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசின் மூலம் பல்வேறு தொழில்கள் தொடங்கும் வகையில், பல்வேறு தனித்திறன் பயிற்சிகள் மற்றும் கடனுதவிகளும் வழங்கப்படுகிறது. தமிழக அரசின் திட்டங்களை முழுமையாக தெரிந்து கொண்டு, இளைஞர்கள் தனித்திறமைகளை வளர்த்து வேலைவாய்ப்புகளை பெற்று உங்களது பெற்றோர்களுக்கும், குடும்பத்தினர்களுக்கும் உறுதுணையாக திகழ்ந்திட வேண்டும்.

இம்முகாமில், கலந்து கொண்ட இளைஞர்களாகிய நீங்கள் இதை அனுபவமாக எடுத்துக் கொண்டு தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், வீட்டின் அருகிலேயே பணி கிடைக்கும் என்று இருக்காமல் வெளியூரிலும் பணியாற்ற தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். சிறிய பணியாக இருந்தாலும் அந்த பணி அனுபவத்தினை வைத்து, திறமைகளை வளர்த்து உயர் பணியிடங்களுக்கு, உயர் பதவிகளுக்கு செல்ல வேண்டும். மேலும், நம் இருப்பிடத்தை சுகாதாரமாக வைத்திருக்க அனைவரிடமும் இளைஞர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நமது மாவட்டத்தில் கிராம சுயாட்சி இயக்கம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அனைவரும் காப்பீட்டு சந்தா தொகை ரூ.330/– மற்றும் ரூ.12/– செலுத்தி, காப்பீடு செய்திட வேண்டும். மேலும், எல்இடி பல்புகள் அதிகளவில் உபயோகப்படுத்துவதன் மூலம் மின்சார சிக்கனத்தை ஏற்படுத்த முடியும். சுகாதாரத்துடன் வாழ அனைத்து இல்லங்களிலும் தனிநபர் கழிப்பறை கட்ட வேண்டுமென பேசினார்.

முன்னதாக, தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திறன் தொடர்பாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராம சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் சார்பாக வெற்றி பயணம் எனும் குறுந்தகட்டினை கிராம சுயாட்சி இயக்க மத்திய பார்வையாளர்கள்/ சார்பு செயலர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், கிராம சுயாட்சி இயக்க மத்திய பார்வையாளர்கள்/ சார்பு செயலர்கள் திரு.கலாதரன், திரு.பத்மநாபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கஜேந்திரநாதன், மகளிர் திட்டம், உதவி திட்ட அலுவலர்கள் பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் முக்கிய பிரமுகர்கள், அனைத்து துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி